Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு [illegible] / பர்மா, மலேயா, [illegible]

குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 3-8-1946 ஆடி மீ 19உ { மலர் 43

லீக் முடிவு

ஒத்துழையாமை :: சட்டமறுப்பு பட்டம் துறத்தல்

★

1. சர் குலாம் ஹுசேன்
2. சர் நாஜிமுத்தீன்
3. சர் பிரோஸ்கான் நூன்
4. நவாப் சர் மேஜர் ஷா
5. சர் முகமத் சாதுல்லா
6. ராஜா கஜ்னாபர் அலி
7. கான்பகதூர் குர்ரோ
8. கான்பகதூர் ஜலாலுத்தீன்
9. நவாப் ஜாதா நஜருல்லா
10. நவாப் ஜாதா லியாகத் அலிகான்

ஆகியோர் உடனே பட்டம் துறந்தார்கள்

29-7-46ல் பம்பாயில் கூடிய அகில இந்திய முஸ்லிம் லீக் செயற்குழு கூட்டத்தில், முன்னர் தாங்கள் ஏற்றுக்கொண்டிருந்த பிரிட்டிஷ் தூதுவரின் திட்டத்தைப் புறக்கணித்து நேரிடையான போரில் இறங்குவதாகத் தீர்மானித்துவிட்டனர். ஆழ்ந்து சிந்தித்த பிறகே லீகர்கள் இம்முடிவிற்கு வந்துள்ளனர்.

தீர்மானம் வருமாறு:-

மே மாதம் 16ந்தேதி பிரிட்டிஷ் மந்திரிசபை தூதினரும், வைஸ்ராயும் வெளியிட்ட அறிக்கையில் கண்ட பிரேரணைகளை நிராகரிக்க அ. இ. முஸ்லிம்லீக் இன்று தீர்மானித்திருப்பதால் ஒருபுறம் காங்கிரசின் பிடிவாதத்தாலும், மற்றொருபுறம் முஸ்லிம்களுக்குப் பிரிட்டிஷ் சர்க்கார் நம்பிக்கைத் துரோகம் செய்ததால், விட்டுக்கொடுத்தல் மூலமும் சட்ட வரம்பு கடவாத சாதனங்கள் மூலமும் இந்திய பிரச்சினைக்குச் சமாதான முறையில் ஒரு பரிகாரம் காண முஸ்லிம் இந்தியா செய்த முயற்சிகளெல்லாம் வீணானதாலும் பிரிட்டிஷ் உதவியுடன் இந்தியாவில் ஜாதி இந்து ராஜ்யமொன்று ஸ்தாபிக்க காங்கிரஸ் முனைந்திருப்பதால் இந்திய விவகாரங்களில் நீதி, நேர்மைக்கு இடமின்றி ஆதிக்க ராஜ்யத்திற்கே இடமேற்பட்டிருப்பதால் சுதந்திரமானதும் பூரண ராஜாங்க கௌரவமுள்ளதுமான பாக்கிஸ்தானை உடனடியாக ஸ்தாபிப்பதற்குக் குறைவான எதிலும் இந்திய முஸ்லிம்கள் திருப்தியடையமாட்டார்களாகையால் லீகின் சம்மதமின்றி நீண்ட கால அல்லது குறுகிய கால அரசியல் எதையும் அமலுக்குக் கொண்டுவரும் முயற்சியையோ அல்லது மத்தியில் ஓர் இடைக்கால சர்க்கார் ஏற்படுவதையோ எதிர்க்கப்போவதால் முஸ்லிம்லீக் அடியிற்கண்டவாறு தீர்மானிக்கிறது. பாகிஸ்தானை ஸ்தாபிக்கவும், தங்கள் உரிமைகளையும், கௌரவத்தையும் நிலைநாட்டவும், பிரிட்டிஷாரின் கீழ் அடிமை வாழ்வையும் வருங்காலத்தில் [illegible] படும் ஜாதி இந்து ஆ[illegible]த்தையும் ஒழிக்கவும், முஸ்லிம் சமுதாயம் நேரடி நடவடிக்கைத் எடுக்க தருணம் வந்துவிட்டது. தங்களது ஏக பிரதிநிதித்துவ ஸ்தாபனமான அ. இ. முஸ்லிம் லீகை ஆதரிக்கும்படியும் ஒவ்வொரு தியாகத்திற்கும் தயாராக இருக்கும்படியும் இந்த கௌன்சில் முஸ்லிம்களை அழைக்கிறது. மேலே கண்ட கொள்கையை நிறைவேற்ற நேரடி நடவடிக்கை திட்டமொன்றை உடனே தயாரிக்கும்படியும் அவசியமானபோது ஆரம்பிக்கப்படக்கூடிய, வரப்போகும் போராட்டத்திற்கு முஸ்லிம்களிடை கட்டுப்பாட்டை ஏற்படுத்தும்படியும் காரியக்கமிட்டிக்கு இந்த கௌன்சில் உத்திரவிடுகிறது. பிரிட்டிஷ் போக்கை ஆட்சேபித்தும் வெறுப்பு தெரிவிக்கவும் அன்னிய சர்க்காரால் வழங்கப்பட்ட பட்டங்களை உடனே துறக்கும்படி இந்த கௌன்சில் முஸ்லிம்களை அழைக்கிறது.

பட்டங்களைத் துறக்கவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேறியதும் மேடையேறி பட்டங்களைத் துறந்து விட்டதாக அறிவித்தவர்களில் முக்கியமானவர்கள் வருமாறு:-

சர் குலாம் ஹுசேன், சர். நாஜிமுத்தீன், சர் பிரோஸ்கான் நூன், நவாப் சர் மேஜர் ஷா. சர் முகமத் சாதுல்லா, ராஜா கஜ்னாபர் அலி, கான்பகதூர் குர்ரோ, கான்பகதூர் ஜலாலுத்தீன், நவாப் ஜாதா நஜருல்லா முதலிய மற்றும் பலர். நவாப் ஜாதா லியாகத் அலிகான், தமது "நவாப் ஜாதா" பட்டம் பிரிட்டிஷ் சர்க்காரால் கொடுக்கப்பட்டதல்லவென்றாலும் தம்மையும் அந்தப் பட்

டத்தை நீக்கியே அழைக்கவேண்டு மென்றார்.

இரண்டு தீர்மானங்கள் நிறைவேறியபிறகு ஜனாப் ஜின்னா கூறியதாவது:-

"நமது சரித்திரத்திலேயே மிகப் பிரசித்திபெற்ற ஒரு காரியத்தை இன்று நாம் செய்திருக்கிறோம். சட்டசம்மதமானவை தவிர வேறு எந்த முறைகளையும் இதுவரை லீக் தன் சரித்திரத்தில் பின்பற்றியதே இல்லை. ஆனால் இன்று நாம் இந்த நிலைமைக்கு வரும்படியாக நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறோம். சட்டசம்மதமான முறைகளுக்கு இன்றையதினம் நாம் விடைகொடுத்தனுப்பிவிட்டோம்'

மேலும் கூறியதாவது:-

சம்பாஷணைகள் நடந்துகொண்டிருந்தபோது பிரிட்டிஷாரும் காங்கிரசும் மிரட்டற் சாதனங்களை வைத்திருந்தனர். பிரிட்டிஷார் அதிகாரத்தைக் காட்டினர். பொதுஜனப் போராட்டத்தையும், ஒத்துழையாமையும் காங்கிரஸ் காண்பித்தது. இன்று ஒரு சாதனத்தை நாம் தயாரித்துவிட்டோம். அதை உபயோகிக்கக் கூடிய நிலையிலும் நாம் இருக்கிறோம்.

அந்தப் பிரேரணைகளை நிராகரித்து நேரடி நடவடிக்கையில் இறங்குவதென்ற முடிவு அவசரத்தில் செய்யப்பட்டதல்ல. முழுப் பொறுப்புடன் தீர்க்காலோசனைக்குப் பிறகு இம்முடிவைச் செய்தோம். இதன்படி நடக்கப்போகிறோம். இதன் ஒவ்வொரு வார்த்தையின கருத்தை நன்கறிவோம். வேஷம் போடுவதில் எங்களுக்கு நம்பிக்கையில்லை."

தீ மிதி விழாவில் குழப்பம்

26-7-46ல் சக்கரசி நல்லூரில் பச்சையம்மன் தீ மிதிவிழா நடந்தது. அதுகாலை மூடப்பழக்கத்தை முறியடிக்கத் துணிவுகொண்ட திராவிட கழகத்தைச் சார்ந்தவர்களில் சிலர் முதலில் தீ மிதித்தனர். குடி மயக்கங்கொண்டவர் பொதுமக்களை மிதித்துக்கொண்டு மாச்சினையைத் தூக்கி வந்தனர். அதன் காரணமாக ஒருகிழவியும், ஒரு சிறு பையனும் கீழேவீழ்த்தப்பட்டுத் துன்பத்திற்காளானார்கள்.

அதுகாலை குழப்பம் ஏற்படவே திராவிடர் கழகத்தினர் அமைதியை நிலைநிறுத்தினார்கள்.

திராவிடர்கழகத் தோழர்களுக்கு

இவ்வாண்டு தொடக்கத்திலிருந்து அங்கத்தினர் சேர்க்கும் இரசீது புத்தகங்கள் சுமார் 2000க்கு மேல் இதுவரை அனுப்பப்பட்டுள்ளன. இதில் இருபதில் ஒரு பாகங்கூட இன்னும் சேர்த்தனுப்பப்படவில்லை. ஆர்வத்துடன் எழுதிக்கேட்டு இரசீது புத்தகங்களைப் பெற்றது தவிர ஊக்கத்தோடு அதைக் கவனிக்கவில்லை. இலட்சம் அங்கத்தினர்கள் சேர்த்தாக வேண்டுமென்று பலமுறை வேண்டிக்கொண்டும் இன்னும் ஐம்பதினாயிரத்திலேயே எண்ணிக்கை இருக்கிறது.

மாநாடுகளும் கூட்டங்களும் மட்டும் அதிகப்படியாகவே நடத்தி வருகிறோம். இதனால் ஏதேனும் பயன் ஏற்பட்டதென்றால் அங்கத்தினர் சேர்த்ததொகை அதிகப்பட்டிருக்க வேண்டும். கழக நிர்வாகஸ்தர்களும் பிற தோழர்களும் சிறிது கவலை எடுத்துக்கொண்டிருப்பின் இலட்சம் அங்கத்தினர்களைச் சேர்ப்பது இவ்வளவு பின்னடைந்திருக்காது. இதன்றியும் திராவிடர் கழக நிதி சேர்க்க ஜில்லாதோறும் டிக்கட்டுகள்! அனுப்பப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஜில்லாவின் வசூல் பொறுப்பு விவரம் வேறு இடத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. செப்டம்பர் முடிவுக்குள் 50,000 ரூபாயும் வசூலித்தாக வேண்டும்.

ஆகஸ்டு, செப்டம்பர் இந்த இரண்டு மாதங்களில் நிதி ரூபாய் 50,000மும், அங்கத்தினர்கள் இன்னும் 50,000 பேர் சேர்த்தாகவேண்டியது ஆங்காங்குள்ள கழக நிர்வாகஸ்தர்களின் பொறுப்பு ஆகும். இயக்கத் தோழர்களும் கழக நிர்வாகஸ்தர்களோடு ஒத்துழைத்து ஆவன செய்ய வேண்டுகிறேன்.

செயலாளர்,
மத்திய திராவிடர் கழகம்,
தலைமை நிலையம், சென்னை.

தஞ்சை மாவட்டத் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக்கூட்ட அழைப்பு

நாளது 11-8-46 ஞாயறன்று மாலை 4மணிக்குக் கும்பகோணம் டவுன் நாகேஸ்வரன் வடக்குவீதி டி. எம். நாயர் ஞாபகார்த்தக் கட்டட நிலையத்தில் தஞ்சை மாவட்டக் கமிட்டிக்கூட்டம் நடைபெறும். மாவட்டத்திலுள்ள எல்லா திராவிடர் கழகப் பிரதிநிதிகளும் தவறாமல் கூட்டத்திற்கு வரும்வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கூட்டத்தில் மாகாணக்கழக நிதி சேகரிப்பு குறித்தும், மாவட்ட எதிர்கால வேலைத்திட்டங்கள் பற்றியும் ஆலோசிக்கப்படும்.

இங்ஙனம்,
வி. சின்னதம்பி,
தஞ்சை மாவட்டக்கழக செயலாளர்.

இயக்கத் தோழர்களுக்கு வேண்டுகோள்

"குடி அரசில்" அரசியல், சமுதாயம் முதலியவற்றைப்பற்றிய கட்டுரைகள் வெளியிட விருப்பதால் இயக்கத்தின் சார்பில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் குறித்த செய்திகளை குடி அரசுக்கு அனுப்பவேண்டா மென்றும், விடுதலைக்கு அனுப்பும் படியும் பன்முறையும் கேட்டுக்கொண்டும் மீண்டும் இயக்கத்தோழர்கள் பலர் இயக்கச் செய்திகளைக்குறித்து எழுதி குடி அரசில் வெளியிடும் வண்ணம் கேட்கின்றனர். எனவே, இனி மேலாவது இயக்கத்தோழர்கள் குடி அரசுக்கு இயக்கச் செய்திகளை அனுப்பாமல் விடுதலைக்கே அனுப்பும்வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

(ஆ-ர்)

வேண்டுகோள்

6-7-46ல் பெண்ணாகடம் சிவகுருநாதன் கழகத்தின் சார்பில் தோழர் செ. இராதாகிருட்டினர் தலைமையில் நடந்த கூட்டத்தில் 850 மாணவர்களுக்குமேல் பயின்றுவரும் தொடக்கப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றவேண்டுமென்று இன்றைய காங்கரஸ் மந்திரிசபையாரைக் கேட்டுக்கொள்வதாய்த் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சேலம் மாநாட்டுத் தீர்மானம்

27-8-44ல் சேலம் மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்:

"கால நிலையையும், உலகப் போக்கையும், சர்க்கார் நிலையையும், நம் மக்கள் தன்மையையும், இதுவரை நாம் நடந்துவந்ததன் மூலம் ஏற்பட்ட அனுபவத்தையும், அதனால் உண்டான பலனையும் மற்ற ஸ்தாபனங்களுக்கும், சர்க்காருக்கும் இருந்து வரும் நிலைமையும், அதனால் அவைகளுக்கு ஏற்பட்ட பலனையும் நன்றாக ஜாக்கிரதையாக ஆலோசித்துப் பார்த்தால் நம் சமுதாயத்தின் எதிர்கால நலனைக்கோரியும், நம் கட்சியின் பேரால் இதுவரை நமக்கும் சர்க்காருக்கும் இருந்துவரும் போக்கை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டிய நிலைமைக்கு நாம் தள்ளிக்கொண்டு போகப்பட்டு விட்டோம்.

அதாவது,

நம் கட்சி தோன்றியகாலம் முதல் இதுவரை நாம் பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒத்துழைத்து வந்ததும், சர்க்காருடன் ஒத்துழையாமை செய்து சர்க்காருக்கு தொல்லை கொடுத்து வந்த ஸ்தாபனங்களை எதிர்த்துப் போராடி சர்க்காருக்கு அனுகூலமான நிலைமையை உண்டாக்க உதவிசெய்து வந்ததும், குறிப்பாக சென்ற ஐந்து வருஷ காலமாக நடந்துவரும் உலக யுத்தத்தில் நல்ல நெருக்கடியில் நேசநாடுகளின் வெற்றிக்கு கேடு உண்டாகும்படியான நிலையில் நம்நாட்டில் பல ஸ்தாபனங்கள் செய்துவந்த பெருங்கிளர்ச்சிகளையும் நாசவேலைகளையும் எதிர்த்து அடக்குவதிலும் நேசநாடுகளுக்கு வெற்றி உண்டாக பணம், ஆள், பிரசாரம் முதலியவைகள் நிபந்தனையின்றி சர்க்காருக்கு உதவி வந்ததும் சர்க்காராலும் பாமர மக்களாலும் நம் கட்சியை இழிவாகக் கருதப்படத்தக்க நிலை ஏற்படுவதற்குப் பயன்பட்டு விட்டது.

இந்திய அரசியல் சமூக இயல் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் சர்க்காரார் நம் கட்சியையும், நம் இலட்சியமாகிய திராவிடநாட்டுப் பிரிவினையையும் அலட்சியம் செய்து வருகிறார்கள்.

இந்தியமக்களின் அரசியல், சமுதாய இயல் சம்பந்தமான ஸ்தாபனங்களில் நம் ஸ்தாபனம் குறிப்பிடத்தக்கதாகவும், நீதிநெறி உடையதாகவும் இருந்து, ஒழுங்கு முறைக்குக் கட்டுப்பட்டு சர்க்கார் மெச்சும்படி நடந்துவந்தும், நம் ஸ்தாபனம் சர்க்காரால் மற்ற சாதாரண ஸ்தாபனங்களோடு ஒன்றாகக்கூட சேர்த்துப் பேசுவதற்கில்லாததாக அலட்சியப் படுத்தப்பட்டது.

மாகாண கவர்னராலோ, கவர்னர் ஜனரலாலோ, இந்தியா மந்திரியாலோ, பிரிட்டிஷ் முதல் மந்திரியினாலோ, இந்திய அரசியல் கட்சிகளைப் பற்றி பல தடவை பேச ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் ஒன்று இரண்டு தடவைகூட நம் சமுதாயத்தையோ நம் ஸ்தாபனத்தையோ, நம் இலட்சியத்தையோ குறிப்பிட கட்டுப்பாடாய் மறுத்தே வரப்பட்டிருக்கிறது.

ஆகவே இப்படிப்பட்ட நிலைமை மாறி நம் கட்சிநிலை மதிக்கப்படவும் குறிப்பிடவும் மக்களின் மன நிலையில் மாற்றம் ஏற்படவும், நம் கட்சி இனியும் கட்டுப்பாடும் உரமும் பெற்று உண்மையான தொண்டர்களைக்கொண்டு காரியமாயும் தீவிரமாயும் தொண்டாற்றி மதிப்புப் பெறவும் நல்லவசதியும் சௌகரியமும் ஏற்படுவதற்கு நம் கட்சிக்கு அடியில் கண்ட திட்டம் உடனே அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டியது அவசியமும் அவசரமுமான காரியமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது:

அ. நம் கட்சியில் இருக்கும் அங்கத்தினர்களும் இனியும் வந்து சேர இருக்கும் அங்கத்தினர்களும் சர்க்காரால் தங்களுக்கு அளிக்கப்பட்ட எந்தவிதமான கௌரவப்பட்டங்களையும் உடனே சர்க்காருக்கு வாபிஸ் செய்துவிடவேண்டும், இனி ஏற்றுக்கொள்ளக்கூடாது.

ஆ. அதுபோலவே அவர்கள் யுத்தத்திற்கு ஆகவும் மற்றும் சர்க்கார் காரியங்களுக்கு ஆகவும், மத்திய சர்க்காராலோ, மாகாண சர்க்காராலோ எந்தவிதமான கமிட்டியில் எப்படிப்பட்ட கௌரவஸ்தானம், அங்கத்தினர் பதவி, ஆலோசகர் பதவி அளிக்கப்பட்டிருந்தாலும் அவைகளை எல்லாம் உடனே இராஜிநாமாச் செய்து விடவேண்டியது.

இ. தேர்தல் அல்லாமல் ஸ்தல ஸ்தாபனம் அதாவது ஜில்லாபோர்டு முனிசிபல் சபை, பஞ்சாயத்து போர்டு ஆகியவைகளின் தலைவர் உபதலைவர் அங்கத்தினர் ஆகிய பதவிகளில் சர்க்காரால் நியமனம் பெற்ற அல்லது நியமனம்பெற்று அங்கத்தினர்களால் தேர்தல் பெற்றோ இருக்கிறவர்கள் யாவரும் தங்கள் தங்கள் பதவிகளை உடனே இராஜிநாமாச் செய்து விட வேண்டியது.

ஈ. சர்க்காரால் தொகுதி வகுக்கப்பட்ட எந்தவிதமான தேர்தலுக்கும் கட்சி அங்கத்தினர்கள் நிற்கக்கூடாது.

அறிவிப்பு

இப்பொழுது ஏற்பட்டுள்ள ஸ்ட்ரைக் காரணமாக தபால் போக்குவரத்து ஸ்தம்பித்து விட்டதால், "குடி அரசு" ஏஜண்டுகளும் சந்தாதாரர்களும் ஆபீசுக்குச் சேரவேண்டிய பாக்கித் தொகைக்கு பாங்கு ட்ராப்ட்டு அல்லது இந்தியன் போஸ்டல் ஆர்டர் வாங்கி (கிராஸ் செய்து) மானேஜர் குடி அரசு, ஈரோடு. என்ற விலாசத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மானேஜர் 'குடி அரசு"

பிறப்பு

இராமநாதபுரம் மாவட்டம் அம்மன பட்டியைச்சேர்ந்த சோ. சித்திரன் அவர்கள் வாழ்க்கைத் துணைவியாரும், நமது இயக்கத் தோழரான எஸ். கே. சிங்காரவேல் அவர்களின் மூத்த சகோதரியுமான தோழியர் பொச்சி அம்மாளுக்குப் பிறந்த ஆண்மகவுக்கு இளங்கோவன் என்று பெயரிட்டதின் நினைவாக குடியரசு வளர்ச்சிக்கு இரண்டு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

குடி அரசு

1946-ஆம் ஆகஸ்டு-மீ 3உ

இனியாவது உணர்ச்சி வாராதா

பம்பாயில் கூடிய முஸ்லிம் லீக் செயற்குழுவில் முஸ்லிம் லீகர்கள் "பிரிட்டிஷ் தூதுவரின் திட்டத்தை நிராகரித்து, நேரடியான நடவடிக்கையில் இறங்குவதென்றும், லீக் உறுப்பினர் அனைவரும் அரசியலார் அளித்த கௌரவப் பட்டங்களைத் துறந்து விடுவதென்றும் தீர்மானித்துவிட்டார்கள். (தீர்மானம் வேறு பக்கத்தில்) தூதுகோஷ்டியார் கொண்டு வந்த திட்டங்களை நன்றாக ஆராய்ந்த பின்னரே இம்முடிவுக்கு லீகர்கள் வந்துள்ளனர் என்றறிகின்றோம். காங்கரஸ்காரர்களும், ஆங்கிலேயர்களும் சேர்ந்து நடித்த கபட நாடகத்தின் விளைவு இன்று முஸ்லிம்கள் நேரடியான நடவடிக்கையில் இறங்குவதற்குக் காரணமாயிருக்கின்றது என்பது தெளிவு.

பட்டங்களைத் துறக்கவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடனேயே முஸ்லிம் லீக்கைச் சார்ந்த பதின்மர் (பதின்மர் பெயர்களும் வேறு பக்கத்தில்) தங்கள் கௌரவப் பட்டத்தைத் துறந்துவிட்டனர்.

முஸ்லிம் லீகர்கள் செய்துள்ள முடிவைக்கண்டு நாம் அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறோம். இதே நேரத்திலே நம் திராவிடர்களைப்பற்றிச் சிறிது பேசவேண்டிய நிலையிலுள்ளோம். "நாட்டுப் பிரிவினை வேண்டும்; திராவிட நாடு திராவிடர்களுக்காக்கப்பட வேண்டுமென்று பெரியார் இராமசாமி அவர்கள் முதலிலே கூறினார்கள். அவர் கூறியதைக் கேட்ட பின்னர்தான் ஜனாப் ஜின்னா அவர்கள் "முஸ்லிம்களின் நலம் காப்பாற்றப் படுவதற்குப் பாக்கிஸ்தான் தேவை" என்ற பிரச்சினையை எழுப்பினார். ஆனால் திராவிடர்களிடையே ஒற்றுமை, ஊக்கம், மானம் இனவுணர்ச்சி முதலியன இல்லாத காரணத்தால் பெரியார் இராமசாமி அவர்களின் வேண்டுகோள் இன்னும் தக்கஉருவாகவில்லை. பெரியாருக்குப் பின்னரே பாக்கிஸ்தான் வேண்டும் என்ற பிரச்சினையை ஜனாப் ஜின்னா அவர்கள் கிளப்பினாலும் இன்று அஃது ஓர் முக்கிய தத்துவம் வாய்ந்ததாகவும், உலகப் பிரச்சினையாகவும் நாட்டிலே உலவி வருகின்றது.

அடுத்தபடியாக 27-8-'44ல் சேலத்தில் பெரியார் இராமசாமி அவர்களின் தலைமையில் கூடிய நீதிக்கட்சி மாநாட்டில், பிரிட்டிஷ் சர்க்கார் திராவிடர்களுக்குச் செய்துவரும் அநீதிகளை எடுத்துக்காட்டி, அதன் வாயிலாக திராவிடர்கள் பிரிட்டிஷாரை முற்றிலும் வெறுக்கின்றார்கள் என்பதைக் காட்டுவதற்காக "அரசியலார் அளித்த கௌரவப்பட்டம் பதவிகளை நீதிக்கட்சியினர்கள் அனைவரும் துறந்துவிடவேண்டும்" என்ற தீர்மானம் (தீர்மானம் வேறு பக்கத்தில்) நிறைவேற்றியது வாசகர்களுக்கு நினைவிருக்கும். தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன் நீதிக்கட்சியிலுள்ள பட்டம் பதவி பெற்ற தோழர்கள் தங்கள் கௌரவப் பட்டம் பதவிகளைத் துறக்க மனமில்லாமல் கட்சியை விட்டே விலகிவிட்டனர். ஆனால் ஜனாப் ஜின்னா அவர்கள் "பட்டம் பதவிகளை முஸ்லிம் லீகர்கள் துறக்கவேண்டும்" என்று கூறிய உடனேயே பலர் தங்கள் பட்டம் பதவிகளைத் துறந்துவிட்ட பின்னர்தான் தங்கள் இருப்பிடம்விட்டு எழுந்தனர்.

நமக்குப்பின்னர் "பாக்கிஸ்தான் வேண்டும் என்று கூறிய முஸ்லிம் லீகர்கள் இன்று உலகத்தின் ஒவ்வொரு பகுதியிலுள்ளவர்களின் கவனத்தையும் இழுக்கின்றனர் என்றால், நமக்குப்பின்னரே பட்டம் பதவி விடத்தீர்மானித்தாலும் உடனே பதின்மர் சர், ராஜா, நவாப் முதலிய பட்டங்களை விட்டார்கள் என்றால், அவர்களிடத்திலுள்ள கட்டுப்பாடுதான், ஒழுங்குதான் சுயநலம் அற்ற தன்மைதான் மானம்தான், ஒரு சாதி, ஒரு இனம் என்ற உணர்ச்சிதான் அதற்குக் காரணம் என்று சொல்லவேண்டும். எனவே, இன்று முஸ்லிம் லீகர்கள் போகின்ற போக்கைப் பார்க்குங்கால் மிக விரைவில் தங்கள் குறிக்கோளான பாக்கிஸ்தானை அடைந்தே தீருவார்கள் என்பது உறுதி, உறுதி.

திராவிடர் கழகத்தில் ஏதோ இதுவரையில் சுமார் 50,000 உறுப்பினர்கள் இருந்தபோதிலும் அவர்களிடத்தில் ஓர் கட்டுப்பாடான உணர்ச்சி, இல்லையென்பதையும், தன்னலம் விடுத்து இயக்கத்திற்காக வாழ்பவர் இன்னார்தான் என்று சொல்லப்படுவதற்கு ஒருவர் கூட இல்லை என்பதையும் மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் திராவிடர் கழகத்தை விட்டு வெளியில் சென்றவர்கள், திராவிடர் கழகத்தில் அமைப்பு முறை நன்றாக இல்லை என்று வாய்ப்பறை சாற்றினார்கள். ஆனால் கொள்கைகள் மிகச் சிறந்தவை, நாட்டிற்கு நலம் பயக்கத்தக்கவை என்றெல்லாம் கூறினார்கள்.

திராவிடர் கழகக் கொள்கைகள் நல்லவை என்று பேச்சள

விலே கூறுகின்றார்களே ஒழிய நடைமுறையில் இவர்கள் திராவிடர் கழகத்தின் கொள்கைப்படி நடக்கின்றார்களா? எதிலாவது எப்போழ்தாவது நடந்தார்களா? என்றால் முற்றிலும் இல்லை. "பட்டம் பதவிகளை விட்டுவிடுதல் வேண்டும்; அந்த வகையில் நம்மைச் சுரண்டுகின்ற வெள்ளையனிடத்தில் வெறுப்பைக்காட்டி நேரிடையான போரில் இறங்கலாம்" என்று பெரியார் கூறினால் அதன்படி இன்று எத்தனை மேதாவிகள் பட்டம் பதவிகளை விட்டுவிட்டனர்? பின்னர் இவர்கள் கொள்கைகள் பிடிக்கின்றன என்று கூறுவதில் என்ன பொருள் இருக்கின்றது என்று கேட்கின்றோம்.

வெள்ளையர்களால் ஒட்டப்பட்ட வால்களை நறுக்கிக் கொள்வதற்கு விரும்பாமல் கட்சியையே புறக்கணித்துவிட்டு, தங்கள் தலையில் மேலும் கொம்பு எவையேனும் ஒட்டுவார்களா என்ற ஆசையுடன் வெள்ளையர்களுக்கு வால்பிடிக்கும் ஒரு கூட்டம், கட்சி ஒழுங்காக இல்லை என்று கூறுவதில் என்ன பொருள் இருக்கின்றது என்று கேட்கின்றோம்.

ஆகவே திராவிட மக்களில் பெரும்பாலும் பெரியோர்கள், பழந்தலைவர்கள், தொண்டர்கள் என்பவர்கள் கட்சியின் பேரால் லாபமடைவதைத் தவிர நட்டம் என்றால் ஓடுகிறவர்களும், கட்சியை வைகிறவர்களுமாக இருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

மேலும் முஸ்லிம்லீகர்களைப் பற்றியும், தாழ்த்தப்பட்டவர்களைப்பற்றியும் ஒன்று கூற விரும்புகின்றோம். பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களும் திராவிடர் கழகத்தினரும் "வந்துபோன் அது கோஷ்டியின் திட்டம் காங்கரசைத் திருப்திசெய்து புது ஒப்பந்தம் செய்துகொள்ளும் வகையில்தான் இருக்கும்; முஸ்லிம் லீகர்களையும், தாழ்த்தப்பட்டவர்களையும், திராவிடர்களையும் திருப்திசெய்யும் முறையில் சிறிதும் இருக்காது" என்று கூறி வந்துள்ளனர். அதன்படியே இன்று நடைபெற்றிருப்பது யாவரும் உணர்ந்ததே. இதை முன்னரே லீகர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் உணர்ந்து அரசியல் நிர்ணயசபையை வெறுத்து, புறக்கணித்திருப்பார்களானால் இப்போது அவர்கள் தொடங்கியிருக்கும் போராட்டத்தை முன்னதாகவே தொடங்கி இதற்குள் ஓர் பெரும் வெற்றியைக் கண்டிருக்கலாம். இப்போழ்தும் ஒன்றும் முழுகிவிடவில்லை. இன்றைய காங்கரஸ்காரர்களின் போக்கு "நாங்கள் வெளியேறுகிறோம்" என்கின்ற ஆங்கிலேயர்களின் ஆட்சியை "நீங்கள் இப்போது போகாதீர்கள், இன்னும் 10 ஆண்டுகள் கழிந்த பின்னர் போகலாம்" என்று கூறி நிலைநிறுத்துவதாகவே இருக்கின்றது. அது மாத்திரமன்றி காங்கரஸ் இயக்கமல்லாத வேறு கட்சிகளை அடக்கி ஒடுக்கி அவர்களின் நலன்களைப்பாதிக்கும் முறையிலேயும் இருக்கின்றது. இதை இப்போதுதான் லீகர்களும், தாழ்த்தப்பட்டவர்களும் உணர்ந்தார்களெனினும் உடனே போர் தொடங்கிவிட்டார்கள்.

ஆனால் திராவிடர்கள் சில ஆண்டுகளுக்கு முன்னமே இதைத்தெரிந்திருந்தும் இன்னும் நேரடியான போரில் இறங்கவில்லை என்பதோடல்லாமல் ஓடி ஒளியவும் பார்க்கிறார்கள். சிலர் ஒழிந்தும்விட்டார்கள். இதற்குக் காரணம் அவர்களிடையே குடிகொண்டிருக்கும் இன உணர்ச்சி அற்றதன்மையே யாகும்.

முஸ்லிம்களையும் ஆதிதிராவிடர்களையும் பார்த்தபிறகாவது திராவிடர்கள் யாவரும் இனவுணர்ச்சிகொண்டு, கட்டுப்பாடுடன் போர் தொடங்கவேண்டும். இனவுணர்ச்சி கொள்ளாது "இராவணன் ஆண்டாலென்ன இராமன் ஆண்டாலென்ன" என்ற முறையில் இருப்பார்களானால் திராவிடர்கள் தங்கள் தலையிலேயே மண்ணை வாரிப்போட்டுக் கொள்கின்றவர்களாவார்கள். மேலும், வருங்கால திராவிட மக்களின் தூற்றலுக்கும் ஆளாவார்கள். எனவே அப்படிப்பட்ட பெரும்பழிக்காளாகாமல் திராவிடர் ஒவ்வொருவரும் இன உணர்ச்சியுடன் முன்வருவார்களாக. வந்து நாட்டு விடுதலைக்காகத் தங்கள் கடமையை யாற்றுவார்களாக. ஒற்றுமையுடன் கிளர்ச்சி தொடங்குவோமானால் வெற்றி கிட்டுவது உறுதி. முஸ்லிம்களும் தாழ்த்தப்பட்டவர்களும் தங்கள் விடுதலையைப் பெறும்போழ்தே நாமும் விடுதலை பெறலாம்.

காங்கரசும் பொதுமக்கள் கடமையும்

இந்திய தேசியக் காங்கரஸ், தான் யாருக்குப்பிரதிநிதி என்று கருதிக்கொண்டிருக்கிறது என்பது நமக்கு விளங்கவில்லை.

இந்தப் பரந்த உபகண்டமாகிய இந்தியாவில் (400000.0) நாற்பதுகோடி மக்கள் இருக்கிறார்கள். இந்த 40-கோடி மக்களில் சுமார் பத்துக்கோடி மக்கள் சுதேச சமஸ்தானங்களில் இருந்துகொண்டு காங்கரசுக்கு எவ்வித பிரதிநிதித்துவமும் கொடுக்கமுடியாத நிலையில்

இருந்து வருகிறார்கள். காங்கஸ்காரர்கள் அங்குசெல்லவோ அவர்களின் பிரதிநிதிகள் என்று சர்க்காரிடமோ, சமஸ்தானங்களிடமோ உரிமை பாராட்டிக் கொள்ளவோ வசதியும் தகுதியும் இல்லாத நிலையில் இருக்கிறார்கள்.

மீதி உள்ள 30-கோடி மக்களில் 11கோடி மக்களாகிய முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள், பார்சியர்கள்போக மீதி 19 கோடிபேர்களே இந்தியர்கள் என்னும் பெயரில் இருக்கிறார்கள். இவர்களில் 6-கோடி பேர்கள் தீண்டப்படாதவர்கள்; தங்களை இந்துக்கள் அல்ல என்றும், தாங்கள் காங்கரசில் சேர்ந்தவர்கள் அல்ல என்றும் சொல்லுவதோடு தங்களுக்கு வேறு ஸ்தாபனம் இருப்பதாகவும் அந்தந்த வகுப்பு ஸ்தாபனத்தின் பேரால் சொல்லிக்கொண்டு இருப்பதோடு தனித்தொகுதியும், தனி உரிமையும் பெற்று அந்தந்த [illegible] காங்கரசார் 100-க்கு 5 [illegible] வெற்றிபெற முடியாத நிலையில் காங்கரசைவிட்டு விலகி இருக்கிறார்கள். சென்னை மாகாணத்தைப் பொருத்த வரையில் திராவிடர்கள் தனிஸ்தாபனம் வைத்துக்கொண்டு காங்கரசை எதிர்த்துக்கொண்டு இருக்கிறார்கள். சட்டசபைத் தேர்தலில் முஸ்லிம்தொகுதி கிருஸ்தவர் தொகுதி திராவிடர் தொகுதி என்று தனித்தனியே தொகுதி இருக்குமானால் அதில் காங்கரஸ் தொகுதியிலும் மற்ற தொகுதிகள் போல பெரும்பான்மையோர் தோல்வி அடைந்தே தீருவார்கள்.

மற்றும் மீதியுள்ள இந்தியர்களில் காங்கரஸ் கொள்கைக்கு மாறுபட்ட ஸ்தாபனங்கள் பல இருக்கின்றன. அவையாவன: மிதவாதிகள், கம்யூனிஸ்டுகள், சோஷியலிஸ்டுகள், ரேடிகலிஸ்டுகள், வர்ணாச்சிரமிஸ்டுகள், இந்துமகாசபைஸ்டுகள், ரிபாபிலிஸ்டுகள், பிராமனிஸ்டுகள் என்பனவாதிய பல பிரிவுகள் ஆகும். இவை தவிர மராட்டியர், மார்வாடிகள் என்றும், விஸ்வப்பிராமணர்கள், தேவாங்கப்பிராமணர்கள், சாலியப்பிராமணர்கள், சௌராஷ்டிரப் பிராமணரென்றும், அக்கினிகுல க்ஷத்திரியர், வன்னியகுல க்ஷத்திரியர், பவசார க்ஷத்திரியர், மராட்டிய க்ஷத்திரியர், நாயுடு க்ஷத்திரியர், ராஜு க்ஷத்திரியர் சிங்கு க்ஷத்திரியர் என்றும், வாணியச் செட்டியார் வைசியர், கோமுட்டிசெட்டியார் வைசியர், நகரத்துசெட்டியார் வைசியர், 12x6, 500த்தார், 24 மனையார் வைசியர் என்றும் மற்றும் வேளாளர், பல்ஜியர், ரெட்டியார், எனாதியர், குலாலர் மருத்தவர் அருந்ததியார், தேவேந்திரர், பரதவர் என்றும், பலவேறு பெயர்களால் சமுதாய ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொண்டு அவர்களிலும் சிலர் காங்கரசிலும், கம்யூனிசத்திலும் திராவிட கழகத்திலும், வருணாச்சிரமத்திலும், இந்துமகாசபையிலும் கலந்துகொண்டும் காங்கரசை எதிர்த்தும் ஆதரித்தும் வருகிறார்கள். இந்தத் தன்மையில் காங்கரஸ் என்பது எந்த முறையில் யாருக்குப் பிரதிநிதியாகச் சொல்லிக்கொள்ள முடியும் என்று யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

இந்த விபரம் முழுவதும் உணர்ந்த பிரிட்டிஷார் இப்படிப்பட்ட காங்கரசையே இந்த நாட்டின் பிரதிநிதித்துவ ஸ்தாபனம் என்றும், அதுவே பிரதானமான கட்சி என்றும் கூறி அதற்குத் தங்களாலான ஆக்கம் கொடுத்து, அதைக் கொண்டு மற்ற கட்சிகளை அடக்கி ஒடுக்கச்செய்து, பிறகு அதனுடன் இந்தியாவின் பேரால் ஒரு கூட்டு ஒப்பந்தம் செய்துகொண்டு இருவருமே இனியும் சில காலம் வாழலாம் என்கின்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள்.

சமீபத்தில் நடந்த அரசியல் நிர்ணய சபை தேர்தல் என்பது எவ்வளவு பித்தலாட்டமான முறையில் செய்யப்பட்டது என்பதைப் பார்த்தால் நாகரீக மக்கள் காரி உமிழ்வார்கள் என்றே சொல்லலாம்.

காங்கரசைத்தவிர மற்றவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு வழி இல்லாமலே செய்துவிட்டார்கள்.

மாகாண மேல்சபை (இந்தியா சட்டசபை) மத்தியசபை, ராஜாங்கசபை என்பவற்றிற்கு எல்லாம் சரியான பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும் என்பதற்குஆக நியமனஸ்தானம் என்று ஒவ்வொன்றுக்கும் பல ஸ்தானங்கள் சர்க்கார் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்தப்படி நியமனம் செய்துகொண்டும் வருகிறார்கள். இடைக்காலத் திட்டம் என்று தாங்கள் அமைக்கப்போகும் இடைக்கால சர்க்கார் என்னும் வைசிராய் மத்திய நிர்வாக சபைக்கு ஜாதி இந்துக்கள் முஸ்லிம்கள், மைனாரிட்டிகள், தாழ்த்தப்பட்ட வகுப்பார்கள் என்றெல்லாம் பிரித்து அங்கத்தினர் நியமிக்க ஒப்புக்கொண்டு அதன்படி பெயர்களையும் பொறுக்கி எடுத்தார்கள். அப்படி எல்லாம் இருக்கும் போது அவற்றையெல்லாம் விட முக்கிய காரியமாகிய அரசியல் நிர்ணய சபை என்பதற்குக் காங்கரசாரைத் தவிர, அதுவும் மேலே நாம் எடுத்துக் காட்டியபடி 40கோடி மக்களில் ஒரு சிறு கூட்டமான 4-அல்லது 5-கோடி மக்களுக்குக்கூட யோக்கியமும் உண்மையுமான, சரியானபடி பிரதிநிதித்துவம் இல்லாத காங்கர

சுக்கே தவிர வேறு யாருக்கும் பிரதிநிதித்துவம் இல்லாமல் இருக்கச்செய்திருக்கிறது என்றால் இது பிரிட்டிஷாரின் எவ்வளவு பெரிய பித்தலாட்டமுமான காரியம் என்று சொல்ல வேண்டும்.

யுத்தம் வெற்றிகரமாய் முடிந்தபிறகு நாட்டில் இவ்வளவு அக்கிரமங்களும், அநீதிகளும் காலித்தனமும், கலகமும், குழப்பமும் நடப்பதற்கு உபாக்கியாயராய் இருந்து நாட்டில் காலித்தன உணர்ச்சியைப் பரவச்செய்த காங்கரசைப் பிரிட்டிஷார் கட்டி அணைவது தாங்கள் போரில் வெற்றிபெற்றுவிட்டோம் என்ற ஆணவமும் அப்போருக்கு உதவச்செய்தவர்களிடம் காட்டும் நன்றிபற்றதனமும் அல்லாமல் வேறு என்ன என்று நாம் சொல்ல முடியும். எனவே ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் கொண்ட சமுதாயமான திராவிடர் சமுதாயம் இதற்கு என்ன பதில் சொல்லுகிறது என்று கேட்கிறோம். தனிப்பட்ட மக்கள் வாழ்வுதான் மனித லட்சியமா அல்லது சமுதாய—இன—மானம், முன்னேற்றம், இழிவு நீக்கம் ஆகியவை முக்கிய லட்சியமா என்று கேட்கிறோம்.

ஆசிரியர்கள் மீது முதல் மந்திரியார் பாய்ந்தார்!

சென்னை நகர அரசியலார் உதவி உயர்நிலைப்பள்ளிகளில் பணியாற்றிவரும் 1200 ஆசிரியர்கள் (200 பெண்கள் உள்பட) ஊர்வலமாக அரசியலாரின் அலுவலகத்திற்குச் சென்று முதல் மந்திரி, கல்வி மந்திரி ஆகியோரிடம் தங்களின் குறைகளை விளக்கிக்கூறினராம்.

ஆசிரியர்களுக்கு வேண்டிய வசதிகள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று தாம் முற்கூட்டியே சிந்தித்து வருவதாகவும், அதை எப்பொழுது எம்முறையிற் செய்வது என்பதை முற்றிலும் மந்திரிசபையைச் சார்ந்ததென்றும் முதல் மந்திரியார் கூறினாராம். ஆசிரியர்கள் ஊர்வலமாக வந்தது பிடிக்கவில்லையென்றும், பக்கிங்ஹாம்- கர்னாடிக் ஆலைத்தொழிலாளர்களைப்போலவே ஆசிரியர்களும் நடந்துகொள்ளுதல் கூடாதென்றும் முதல் மந்திரியார் சற்று ஆத்திரத்துடன் கூறினாராம். இவ்விழி மொழியைப் பொறாத ஆசிரியப் பெருமக்களின் கூட்டத்தில் குழப்பமேற்பட்டதாம், முதல் மந்திரியாரின் போக்கைக் கண்டிக்கின்ற முறையில், அன்னாரின் தகாத கூற்றைத் திருப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று ஆசிரியர்கள் பேரொலி எழுப்பினராம். ஆசிரியப் பெண்கள் இதில் பெரும் பங்கு கொண்டனராம். பின்பு முதல் மந்திரியார் ஒருபடி இறங்கிப் பேசியபிறகே கூட்டத்தினர் கலைந்து சென்றனராம்.

முதல் மந்திரியாரின் சீற்றத்திற்குக்காரணம் ஆசிரியர்கள் "தாங்கள் மட்டும் மந்திரிசபைக்குப் போனவுடன் ஊதியத்தை 500 ரூபாயிலிருந்து 1500 ரூபாயாக்கிக் கொண்டீர்களே! மற்றவர்களைப்பற்றிக் கவலை கொள்ளவில்லையே" என்று எழுதிய அட்டைகளை கையில் பிடித்துக்கொண்டு சென்றதுதான் என்று உய்த்துணர்தல் வேண்டியுள்ளது.

குறைகளைக் கூறிக்கொள்ள கூட்டமாக வந்த ஆசிரியர்களிடத்தில் நல்முறையில் மாற்றம் கூறி அவர்களின் குறைகளை விரைவில் தீர்ப்பதாகக் கூறியிருக்கலாம். அவர்கள் மந்திரியாரைப்பற்றி அட்டையில் எழுதியிருப்பது பொய்யா? பக்கிங்காம் கர்னாடிக் மில் தொழிலாளர்களைப்போல் நடந்து கொள்ளக்கூடாது என்று முதல் மந்திரியார் ஆசிரியர்களைப் பார்த்து கூறுகின்ற வகையில் ஒரே அமயத்தில் இரண்டு கூட்டத்தினரிடையிலும் முதல் மந்திரியார் பாய்ந்தவராகின்றார். நியாயத்திற்காகப் போராடிய ஆலைத் தொழிலாளர்களைக் குறைகூறுவது, மக்களின் சிறப்பாக தொழிலாளர்களின் நலத்திற்காகவே மந்திரிசபையில் வீற்றிருக்கின்றோம் என்று கூறும் முதல் மந்திரியாருக்கு நியாயமாகத் தோன்றுகின்றதோ?

சென்னையிலும் தாழ்த்தப்பட்டோரின் சத்தியாக்கிரகம்

ஜூலை மாதம் 28ந்தேதி சென்னை மாவட்ட தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில் டாக்டர் அம்பேத்கார் தோற்றுவித்துள்ள சத்தியாக்கிரக இயக்கத்தை ஆதரித்தும், சென்னையிலும் அதனையொத்த சத்தியாககிரகம் நடத்த வேண்டுமென்று முடிவுசெய்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த கட்சித் தலைவர்கள் யாவரும் அரசியலாரிடமிருந்து பெற்றிருக்கும் பட்டங்களைத் துறந்து பொதுமக்களோடு சேர்ந்துழைக்க முன்வரவேண்டுமென்றும் மாநாட்டில் பேசப்பட்டது.

திராவிட மாணவர் கழகம்

21-7-46ல் பொன்மலை மேலக் கண்டார்கோட்டையில் திராவிட மாணவர் கழகம் அமைக்கப்பட்டு, வே. கிருட்டினமூர்த்தி, சீனிவாசன், மு. மாணிக்கம், சா. ஆபிரகாம், நீ. பசுபதி ஆகியதோழர்கள் முறையே தலைவர், துணைத்தலைவர், செயலாளர், பொருட்காப்பாளர் ஆகவும், மற்றும் சேக் அமீர், பெ. ஆறுமுகம், பொ. சம்பந்தம், ரா. இரத்தினசபாபதி, ஆ. சிவசாமி, மரியதாஸ், இ. அப்துல் அமீத் ஆகிய தோழர்கள் செயற் குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திராவிடர்கழகநிதி

23-6-46ல் நடைபெற்ற திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானித்தபடி கீழ்க்கண்டவாறு ஜில்லாக்களுக்கு திராவிடர் கழக நிதி டிக்கட்டுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்தந்த ஜில்லாவிலுள்ள திராவிடர் கழக நிர்வாகஸ்தர்களும், தோழர்களும் கீழே குறிப்பிட்டுள்ள அந்தந்த ஜில்லா நிதிக் கமிட்டித் தலைவர்களுக்கு, விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்வதோடு வசூலைத் துரிதமாகக் கவனிக்கும்படி கோருகிறேன்.

சென்னை:
சி. டி. டி. அரசு,
11, பொம்முசெட்டித்தெரு,
பி டி. சென்னை

தென்னாற்காடு:
சி. முனுசாமி,
M. R தாஸ் அண்டு கோ.,
சைகிள் கம்பெனி,
விருத்தாசலம்.

வடஆற்காடு:
இ. திருநாவுக்கரசு,
4, ஆகாபசார், வேலூர்,
வடாற்காடு

தஞ்சாவூர்:
வ. சின்னதம்பி,
மிராசுதார், கும்பகோணம்.

திருச்சி:
தி. பொ. வேதாசலம்,
வக்கீல், தென்னூர், திருச்சி

ராமநாதபுரம்:
1. காரைக்குடி
இராமசுப்பையா,
சமதர்ம விலாஸ்,
முத்துப்பட்டணம் காரைக்குடி
2. அருப்புக்கோட்டை
எஸ். எஸ். பழனிசாமி,
திராவிடர் கழகம்,
அருப்புக்கோட்டை.

சேலம்:
ஜி. பி. சோமசுந்தரம்,
மிட்டாதார், வேளுக்குறிச்சி

கோவை:
என். அர்ச்சுனன்,
இளைய பட்டக்காரர்,
பழயகோட்டை, ஈரோடு.

மதுரை, செங்கல்பட்டு, திருநெல்வேலி ஆகிய ஜில்லாக்களுக்குப் பின்னர் அறிவிக்கப்படும்.

செப்டம்பர் முடிவுக்குள் ரூ. ,0,000மும் வசூலிக்காக வேண்டுமாதலால் தோழர்கள் அனைவரும் அயராது முயன்று ஆவன செய்ய வேண்டுகிறேன்.

என். அர்ச்சுனன்,
தலைவர்,
திராவிடர் கழக நிதிக்கமிட்டி,
தலைமை நிலையம், சென்னை.

இயக்கச் செய்திகள்

24-7-46 புதன்கிழமை மாலை 6மணிக்கு சேலம் விக்டோரியா மார்கட் மைதானத்தில் சேலம் திராவிடர் கழகத்தின் சார்பில் தோழர் சேஜெஜதீசன் அவர்கள் தலைமையில் "தற்கால அரசியல் நிலைமையும் திராவிடர் கடமையும்" என்பதைப் பற்றி பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களும், இரா. நெடுஞ்செழியன், ஈ. வி. கே. சம்பத், எ. சித்தையன் ஆகிய தோழர்களும் சொற்பொழிவாற்றினார்கள். கூட்டத்திற்கு சமார் 15000 மக்கள் வந்திருந்தனர். பெரியார் அவர்கள் சுமார் 2½ மணி நேரம் மிக விளக்கமாகப் பேசினார்கள்.

o o

26-7-46 வெள்ளிக்கிழமை மாலை 7மணிக்கு ஈரோடு திராவிடர் கழகத்தின் சார்பில் ஈரோடு காரைவாய்க்கால் மைதானத்தில் தோழர் பி. சண்முகவேலாயுதம் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுகாலை பெரியார் இராமசாமி அவர்களும் பலவர் கிருட்டிணசாமி, மாணவர் எஸ். அப்பாவு ஆகியோரும் சொற்பொழிவாற்றினார்கள். பெரியார் அவர்கள் இன்றைய அரசியல் நிலைமையைப் பற்றியும், ஆங்காங்கு நடைபெறும் கலவரங்கள் பற்றியும், வேலை நிறுத்தத்தைப்பற்றியும் சிறந்ததோர் சொற்பொழிவு ஆற்றினார். கூட்டத்திற்கு பல ஆயிரக்கணக்கான மக்கள் வந்திருந்தனர்.

o o

30-7-46 செவ்வாய்க்கிழமை மாலை 7மணிக்கு ஈரோடு திராவிடர் கழகத்தின் சார்பில் ஈரோடு காரைவாய்க்கால் மைதானத்தில் தோழர் பழனியப்பா அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுகாலை பெரியார் இராமசாமி அவர்களும், தோழர்கள் அப்பாவு, சுப்பையன் ஆகியோரும் சொற்பொழிவாற்றினார்கள். பெரியார் அவர்கள், முஸ்லிம் லீக்கார்கள் இப்போழ்து செய்துள்ள முடிவை ஆதரிக்கின்ற முறையில் விளக்கமானதோர் சொற்பொழிவாற்றினார்கள். கூட்டத்திற்கு ஆயிரக்கணக்கில் மக்கள் குழுமியிருந்தனர். முஸ்லிம் லீக்கார்களும், தாழ்த்தப்பட்டவர்களும் செய்துள்ள தீர்மானங்களை ஆதரித்துத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

o o

19-7-46ல் தளவாய்புரம் திராவிடர்கழகத்தின் சார்பில் தோழர் ஆ. மு. அருணாசலம் அவர்களின் தலைமையில் கூடிய கூட்டத்தில் வில்லிபுத்தூர் தாலுகா முதலாவது திராவிடர் கழக மாநாடு தளவாய்புரத்தில் நடத்துவதென்றும், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்—பாகவதர் ஆகியோர்களை உடனே விடுதலை செய்யும் வண்ணம் காங்கரஸ் மந்திரிசபையைக் கேட்டுக் கொள்வதாயும், தெ. இ. ந. உ. சங்கத்தின் பெயரிலிருந்த ரூ. 4-12-3ம் திராவிடர் கழகத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற ஷை சங்க செயலாளர் இ. பாட்டையா அவர்களின் வேண்டுகோளை ஏற்றும் தீர்மானங்கள் நிறைவேறின. செயலாளர் தா. சங்கரலிங்கம் நன்றி கூறினார்.

காஞ்சிபுரத்தில் பெரியார் அவர்களின் முன்னர் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்ட ஆர். மயிலான்மணி அம்மாள் அவர்களுக்கு 23-7-46 இரவு ஓர் ஆண் மகவு பிறந்தது.

பெரியார் வாலிபர் சங்கம்

5-7-46ல் வடாற்காடு சாயணி செருவில் தோழர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தலைமையில் பெரியார் வாலிபர் சங்கம் திறக்கப்பட்டது. எம். எஸ். முனிசாமி வி. பி. கோவிந்தசாமி ஆகிய தோழர்கள் முறையே தலைவர், செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

Edited Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Catchery street, ERODE.